இராமஜயம்.

இரகுநாதசேதுபதி

ஒருதுறைக்கோவை.

பொன்னாங்கால்

அமிர்தகவிராயர்

செய்தது.

9.1243.

இஃது

எட்டுப்பிரதிகளிற்பாடந்தேர்ந்து மெழுத்தசை சீர் தளையடி தொடை
முதலியசிதைந்தும்பிறழ்ந்தும்வேறுபட்டிருத்தலைநோக்கிச்
சுத்தபாடமாகவழங்குவிக்கும்பொருட்டு

மேற்படி. சமஸ்தானத்துக்கு- இஷ்டராகிய.

ஸ்ரீ. பூம்டாவை

அண்ணாசாமிமுதலியாரவர்கள்

குமாரர்களாகிய

சிங்காரவேலுமுதலியார்

சுந்தரவிநாயகமுதலியார்

இவர்கள்

அச்சிற்பதிப்பித்துத்தருகவெனக் கேட்டுக்கொண்டபடி
யாற்சென்னைக்கல்விச்சங்கத்துத்தமிழ்ப்புலவராகிய

புதுவை.

நயநப்பமுதலியாரவர்களாற்

பலபிரதிகளைக்கொண்டு

பரிசோதிக்கப்பட்டுப்

பிலவ௵-மார்கழி௴- அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை-ரூ-௧.

இரகுநாதசேதுபதி.

ஒருதுறைக்கோவை

நாணிக்கண்புதைத்தல்

பூமேவுதெய்வத்தளிர்முகைபூத்தபொற்கோலவல்லி *
நாமேவுகல்விப்புயறளவாய்ரகுநாதனிசைப் *
பாமேவுகந்தகிரிமணிச்சாரற்பளிக்கறைசூழ் *
காமேவுமற்புதநம்பாலகத்துக்களிதருமே (௧)

சூலங்கைக்கொண்டவிராமேசர்தாண்முடிசூடியெழு *
ஞாலங்கைக்கொண்டரகுநாயகன்செம்பிநாடனையீர் *
சேலங்கைக்கொண்டுயர்வல்லமென்பாலருள்செய்தனல்ல *
காலங்கைக்கொண்டரசாள்வதுபார்த்திருங்கண்களித்தே (௨)

ஆயுந்தமிழினும்போரினும்பாரிலகத்தியனுஞ் *
சேயும்புகழ்தளவாய்ரகுநாதன்சிலம்பில்வள்ளை *
பாயுங்கயலிந்தநேமிசண்டாலெனப்பார்த்திடினுன் *
றோயுந்தடமெனவேயணங்கேயுனைச்சொல்லுவனே. (௩)

தேனூர்மணமுல்லைவெண்டாரும்பைந்தமிழ்ச்செந்தொடையுந் *
தானூர்த்தடம்புயத்தான்ரகுநாதன்றமிழ்ச்சிலம்பில் *
மானூரிளம்பிறைவாணுதலீர்தும்பிவாழுமுங்கள் *
கானூர்குறிஞ்சியிற்செல்கின்றதாரையைக்காட்டிடுமே. (௪)

பண்டேந்தியசங்கினம்போலமல்லிகைப்பாரமுகைச் *
செண்டேந்தியகரத்தான்ரகுநாயகன்றேவைவெற்பில் *
வண்டேந்தியசெங்கைவாழ்வேயென்னெஞ்சமிருகுமதங் *
கொண்டேந்தியவெங்கரிக்கோடுதோயுங்குருதிகண்டே. (௫)

வானச்சுரபியைச்சிந்தாமணியைமந்தாரமென்றுங்
கானப்பொருகொடையான்ரகுநாயகன்கந்தகிரிச்
சோனைப்புதுமதுவார்குழலீரித்துதிக்கைவெம்போ
ரானைக்கிசையிலலங்காரமானுக்கழகல்லவே. (௬)

போரேறுவெங்கணாக்கன்முன்மாதலிபூட்டியபொற்
றேரேறுசிங்கம்ரகுநாதன்றேவைச்சிலம்பில்வெய்ய
காரேறுவன்கண்மைசேர்கையுற்றுமொருகாளைபின்சேர்
வாரேறுகொங்கையைநீதடுத்தாயிலைவன்புறவே. (௭)

மைம்மானிகர்த்தமலைவளர்காதலிமாதுவளர்
பெம்மானருட்குரியோன்ரகுநாதன்பிறங்கலன்னீர்
கைம்மான்குதிக்கறியாதென்றுநீசொன்கலைமதிக்கு
ளிம்மான்குதிக்குமென்றேபிடித்தீர்கையிரண்டினுமே. (௮)

ஆரத்தொடையிடைநீலமிட்டாங்களிதோயுமுல்லை
வீரத்தொடைபுனைவோன்ரகுநாயகன்வெற்பனையீர்
மாரத்தொடைக்குண்முகைத்தாமரைவிட்டுவன்கொலைசூழ்
கோரத்தொடையெனவோபுதைத்தீர்மைக்குவலயமே. (

நடைநிலஞ்சாதிகுலமோடறிவங்கநல்லதந்திப்
படையணிசேர்முன்றிலான்ரகுநாதன்பனிவரைவாய்க்
குடையவர்காந்தளம்பூம்போதுதன்னைக்குறிஞ்சியெங்கோ
னுடையதன்போதென்னவோவிழியூடுகொண்டொத்தியதே. (

இயலைத்தலைபெற்றமுத்தமிழ்வாணர்க்கெழுமடங்கு
புயலைப்பொருவுகையன்ரகுநாதன்பொருப்பனையீர்
முயலைத்தவிர்த்தமதியூடுலாவியமரிவரிக்
கயலைப்பிடிப்பதென்னோகுறமாதர்களிகழ்ந்தே. (

வரைசேர்மருமத்திருவஞ்சியாடமணியுஞ்சலாம்
விரைசேர்தளவத்தொடைரகுநாயகன்வெற்பிலின்ப
வுரைசேர்தமனியப்பாவாய்செந்தேனங்கைசூடுறமின்
னிரைசேரமிர்தகடத்தையென்றோவிட்டுநிற்கின்றதே. (

பாகந்தருமிசைவல்லோர்க்குமான்மதம்பாய்தருகை *
மேகந்தருதளவாய்ரகுநாயகன்வெற்பிலிந்திர *
போகந்தருகளியானையும்லேறுமென்புந்தியின்ப *
மோகந்தருகிளியேதிட்டிசேர்தன்முறையல்லவே. (௧௩)

நாகஞ்செறிமலர்ப்பூங்காவும்பொய்கையுநான்மறையும் *
நாகஞ்செறிதமிழ்த்தேவையர்கோன்ரகுநாதன்வெற்பில் *
நாகஞ்செறிகின்றதென்மதிசாயநற்பார்வைதன்னை *
நாகஞ்செறிவஞ்சியாய்மறைத்தாயதுநன்றலவே. (௧௪)

மாவானகூனிருப்பையெல்லாமத்திவாய்க்குதவுந் *
தேவானவனைப்பணிரகுநாதன்சிலம்பிலென்மேற் *
காவானவைங்குழலீர்படிறேமென்றுகைகளினாற் *
பூவானதுந்தடுத்தீர்விடுத்தீர்பொற்பொருப்பினையே. (௧௫)

தார்கொண்டபாடலம்பேரோடையாம்பறருங்கமலச் *
சீர்கொண்டசெங்கரத்தான்ரகுநாயகன்றேவைவெற்பி *
லேர்கொண்டநீலமடலேறுகைபெரிதீனமன்றோ *
வார்கொண்டகொம்மைப்புளகப்படாமுலைவஞ்சியர்க்கே. (௧௬)

தன்னம்புயத்திற்குவலயந்தார்முல்லைதாங்கிமன்னர் *
சின்னம்பறித்தரகுநாதன்றேவைச்சிலம்பிலின்று [டாற்
பொன்னங்குடத்தை யெதிர்கண்ட லென்னமைப் போதுங்கண்
கன்னங்கறுத்தகுழலாய்நற்காரியங்கைப்பலனே. (௧௭)

செந்தாதும்பூவுஞ்சுருதிவண்டார்ப்பத்தினம்பொழியு *
மந்தாரமன்னகையான்ரகுநாதன்மழவையன்னீர் *
நந்தாமணம்பெறவந்தேனுக்கின்றுநதியமல *
ரந்தாமனாயொளித்தீரளித்தீர்சிற்றரும்பினையே. (௧௮)

பாரோங்கழனியும்வாடாதுதன்மப்பயிர்விளைக்குங் *
காரோயனையரகுநாதன்றேவைக்கனங்குழையீர் *
நீரோபொறிவெம்படநாகங்கைவிட்டுநின்றுவெய்ய *
சூரோபுரிநஞ்சமெவ்வாறுகையிற்றெருடுகின்றதே. (௧௯)

யாழுங்குழலும்பசுந்தேனும்பாகுமிசைந்துகுடி
வாழுந்திருமொழியாய்ரகுநாதன்மணவைவண்டு
சூழுங்களபமுலையானைமுன்னித்துயர்க்கடல்வாய்
வீழுங்கொடுமையெல்லாங்கண்டிலார்செங்கைவேலவரோ (௨௰)

நீலக்கரும்புயருராகணம்வெண்ணிலாவணிந்து
ஞாலத்துவந்தமின்னேதளவாய்ரகுநாதன்வரைக்
கோலத்தினைக்குளினமென்றுமானினங்கூடுமென்றோ
சாலப்புதைத்துநின்றாய்செங்கண்வேழந்தருங்கொங்கையே. ௨௧

சேயென்றுவந்ததளவாய்க்குநாவலர்தீவிற்குமோர்
தாயென்றுவந்தரகுநாதன்றேவைத்தமிழ்வரைமேற்
காயென்றுவில்வக்கனியளித்தீரொண்கலைமதிக்கு
வாயென்றுசற்றுமலராதுபாணிக்குண்மைம்மலரோ. (௨௨)

கோட்டந்தவிர்த்தகுடைமன்னர்கேசரிகூட்டமன்ன
நாட்டந்தவிர்த்தரகுநாதன்வெற்பிலென்னாருயிர்க்கு
வாட்டந்தவிர்த்தவரிவிழியாளைமறைத்தருளி
வீட்டந்தவிர்ப்பதென்னேகுன்றவாணரிளங்கொடியே. (௨௩)

சகராசவீரவெங்கேதனத்தான்கந்தமாதனப்பொன்
னகராசன்வரைக்கிறைதளவாய்ரகுநாதன்வரைச்
சிகராசலத்தின்மலராதநீதெளிந்துகொண்டோ
மகராலயத்தின்மலரவைத்தீர்செம்மலர்க்கஞ்சமே. (௨௪)

கம்பக்கருணையந்தேனாறுஞானக்கனியருள்சே
ரும்பர்க்கரசனையான்ரகுநாதனுயர்வரைவாய்
விம்பக்கனியிதழீர்மணிமார்பில்வெங்கோடுடைய
கும்பக்கரிகொடிதாம்விலக்கீர்மதகுஞ்சரமே. (௨௫)

தொடைபெற்றகொண்டல்பிறையிளநீர்சுமந்தோதிமத்தி
னடைபெற்றகன்னிக்கரும்பனையாய்ரகுநாயகன்வேற்
படைபெற்றசெங்கையும்வேழமுமாய்நிற்றல்பார்த்துமதிக்
குடைபெற்றவெய்யவனெய்யவன்போர்க்குறிகொண்டனனே.

கீதங்குழல்கஞ்சம்வீணைதடாரிகிளந்தபஞ்ச *
நாதஞ்சிலம்பியதேவையர்கோன்ரகுநாதன்வரைக் *
காதங்கமழ்குழலீரொனதாவிகலக்கில்வரு *
மேதம்பெரிதென்னவோமறைத்தீரின்றிணைக்கயலே. (௨௭)

பண்மூடியசெங்கனியித்தழீரொழுபாரகந்தன் *
னுண்மூடியபுகழான்ரகுநாதனுயர்வரைவாய்க் *
கண்மூடியோகியர்போலநின்றீரிக்கருத்தினுக்கு *
விண்மூடியவரைகைவிடிலேதம்விளைவிக்குமே. (௨௮)

மேகந்தருமணிவெண்முத்தராசியின்மென்மலர்ப்புன் *
னாகந்தருகடற்றேவையர்கோன்ரகுநாதன்வெற்பி *
லேகந்தருபதின்மூன்றென்பதான்மறைத்திங்குநின்றீ *
ராகந்தருமைந்துமொன்பதுமேவெளியாகியதே. (௨௯)

பாவாய்நிறைகின்றசெம்பொருளோடுநற்பைம்பொருளு *
நாவாய்த்தருகடற்றேவையர்கோன்ரகுநாதன்வரைப் *
பூவாய்மனுமுறையாலெமைவாழப்புரக்குமிளங் *
கோவாயவனையிறைமறைத்தாலதுகொள்கையன்றே. (௩௰)

வில்லிளங்காளைமயில்காப்பமானைவெருண்டெழுந்த *
நல்லிளங்கேசரிதேவையர்கோன்ரகுநாதன்வரை *
வல்லிளங்கோலமணிமுலைசாலவருத்தும்வண்டு *
புல்லிளங்காமர்விரிந்தசெங்காந்தட்புதுமலரே. (௩௧)

கல்லொன்றிரண்டிளநீர்தாங்கிமுன்வரக்கண்டுமுனி *
சொல்லென்றுநின்றரகுநாதன்றேவைச்சுரும்பின்மணி *
வில்லொன்றுவாணுதலீர்செப்பினூடத்தமேவுமல்லா *
லல்லொன்றுநீலக்கடலூடுசேர்ப்பதறிவின்மையே. (௩௨)

பண்ணார்குதலைக்கனிவாய்சிவந்தபசுங்கிளியீர் *
நண்ணார்சமரிற்புலிதளவாய்ரகுநாதன்வரைக் *
கண்ணாரிணைக்கயன்மங்கலமாமெனக்கைக்கொண்டநீர் *
தண்ணார்தரளமணிக்கும்பநீக்குதறக்கதன்றே. (௩௩)

சந்தேறியதடஞ்சாரலிலாயிரந்தண்மதிபோ
னந்தேறியகந்தமாதனத்தான்ரகுநாதன்வரைக்
கொந்தேறியமலர்வாள்புனைந்தீர்மதகுஞ்சரந்தேன்
வந்தேறியமொழியீர்புனவிர்செங்கைமாமலரோ. (௫௪)

கார்பூத்தபுன்னைவெள்ளோதிமஞ்சீதரன்கைவளைபோ
லேர்பூத்ததேவையர்கோன்ரகுநாயகனேமவெற்பில்
வார்பூத்தபூண்முலையீரறிந்தாய்ந்துமணப்பதற்கோ
தார்பூத்தசெங்கையிலேந்திநின்றீரின்பசாகரமே. (௫௫)

பால்வாய்ப்பசுந்தமிழ்வீசியவாசம்பூத்தவைகைக்
கால்வாய்த்தவிளையர்கோன்ரகுநாதன்கரந்தைவெற்பின்
மேல்வாய்த்திருந்தவெழுத்தாறறிதின்விளங்குமென்றூ
நூல்வாய்த்தநுண்ணிடையீர்மறைத்தீரணிநோக்கினையே. (௫௬)

ஆவியும்பூவுத்தகரமுந்தேனுமணிந்துநறு
நாவியுஞ்சேர்குழலீர்தளவாய்ரகுநாதன்வரைக்
காவியங்கைபுனைத்தீர்விடுத்தீர்தனங்கஞ்சமலர்த்
தேவியும்போலநின்றீர்விருப்பேதுங்கள்சிந்தனைக்கே. (௫௭)

வாவிக்குளொற்றைநவனசமென்றூதுணைமவானிலங்குங்
காவிச்செழுங்குடையான்ரகுநாயகன்காவிரிநாட்
டாவிக்குயிர்தந்தகோட்டூர்தொழுதனமப்படிநீர்
சேவிக்கநல்குங்கமலாலயமுத்திசித்திக்கவே. (௫௮)

சங்கேகொடைத்தருவேயெனவாழ்வுதருங்கருட
வெங்கேதனத்தளவாய்ரகுநாயகன்வரைசுற்றும்
பங்கேருகத்தனமேயொளிசேர்தனபாரமலை
யிங்கேயிருக்கக்கடலேறினுறொன்னிறையவரோ. (௫௯)

கன்னித்திரைச்சங்குமிப்பியுமீனுங்கராவுமொளிர்
நன்னித்திலஞ்சொரிதேவையர்கோன்ரகுநாதன்வெற்பின்
மின்னிற்சிறந்தமின்னேகரிக்கோட்டுவெண்முத்திருக்க
மன்னித்திகழ்கஞ்சமுத்தமென்னேகைவளைகின்றதே. (௬௰)

போரயினுகம்புலிசிலைவாள்வெம்பொறிவழங்கு
மாரெயில்விஜயர்கோன்ரகுநாதனணிவரைக்கு
ணீரரணாகியமைவேலைக்கொண்டநேரிழையீர்
பேரரணைகிரிதுர்க்கநீக்குதல்பெண்புத்தியே. (௪௧)

திரையோங்குபாற்கடற்பூந்தாமரைச்செழுந்தேனிருக்கும்
வரையோங்குமார்பன்ரகுநாதன்றேவைமணிவரைமேல்
விரையோங்குபங்கயத்தாங்கியநீரிருவெற்பொளித்தா
லுரையோங்குவிண்மணியெண்மணினீரொன்றுரைசெய்வரோ. ௪௨

மதிசேரமுதவிதழியஞ்சீதள்[illegible]வைகை
நதிசேர்தெளிபுனல்விஜயர்கோன்ரகுநாதன்வரைப்
பதிசேரிளமுலைசங்கிலிகாட்டும்பணியணிந்தாய்
துதிசேர்பரவையுங்காட்டிலென்போலில்லைசுந்தரனே. (௪௩)

முள்ளார்வெங்கானந்திரைவரைவானமுகடுசென்று
நள்ளார்புகவெஞ்சிலைகுனித்தோன்ரகுநாதன்வரைக்
கள்ளார்கருங்குழலீர்கொடுங்கூற்றையுங்கையமைத்தீர்
புள்ளார்தமைவிலக்கீரொமைவாழப்புரக்கின்றே. (௪௪)

போற்றுங்கமடம்பணிகுலநாகம்பொறுத்தசுமை
யாற்றும்புயவரையான்ரகுநாதனணிவரையீர்
தோற்றுங்கயலைமறைத்தீர்பொற்கஞ்சமுந்தோற்றுவித்தீர்
சாற்றும்பொழுதினினீரோமதுரைத்தடம்பொய்கையே. (௪௫)

நறைபெற்றமாலைக்கதிர்வேலுமாலுமெந்நாளுஞ்செவ்வி
யுறைபெற்றதேவைரகுநாதன்வெற்பிலென்னுள்ளமென்னுங்
குறைபெற்றதாருவைமைந்நீலவண்டுகுடைந்துதிரா
திறைபெற்றபோதமைத்தீர்வத்துசாய்க்குமிபக்குன்றமே. (௪௬)

ஆடகமாமதில்விஜயர்கோன்வண்டலம்புமுல்லை
யேடலர்மாலிகையான்ரகுநாயகனேமவெற்பிற்
கூடகமேவுகைக்கொண்டீர்குவலயந்தோகையன்னீர்
கூடலைவேண்டிவந்தேனளித்தீர்பரங்குன்றினையே. (௪௭)

கங்கமுஞ்சீனமுஞ்சோனகநாடுங்கலிங்கமும்போர் . . *
வங்கமுஞ்சேர்முன்றிலான்ரகுநாதன்மணவைவரைச் . . *
சிங்கமுஞ்சாயவருகரிப்போரிலென்சிற்றுயிரு . . *
மங்கமுந்தேய்வதுயார்த்திரங்காததென்னாரணங்கே. . (சஅ)

நூலுந்துடியுங்கொடிமின்னுநாகமுநுண்மதியும் . . *
போலுந்தளரிடையாய்ரகுநாதன்புனற்கரந்தைச் . . . *
சேலுங்கமலமுங்காவியுமாவுந்தெவ்வேந்தைவென்ற . . *
வேலும்பொருவும்விழியையெந்நாட்கண்டும்மவுவனே. (சகூ)

மல்குங்கிரணமணிசெம்பொன்[illegible]பெருங்கிருபா . . . *
னல்குந்திரைவைகைநாட[illegible]னங்கோன்ரகுநாதன்முறைப் . *
புல்கும்பதியில்விசும்பிடைநீண்டுபுகுதருமீ . . . *
னெல்குந்துடியிடைதோற்றாதென்றோவின்றொளிக்கின்றதே (ரு௰)

மகக்கண்ணிற்சீலமறையோனைவாழ்வித்துவான்கொணர்ந்து *
சகக்கண்ணிற்சேர்த்தரகுநாதன்றேவைச்சாபிலமன்னீர் . . *
முகக்கண்ணிற்காண்டலரிதென்பதோவிழிமூடியன்பா . *
லகக்கண்ணிற்காணப்பதிநோக்கினீர்நன்றறிவுமக்கே. . (ருக)

மலைவேலிவையம்புரந்தசெங்கோன்மனுராசன்மனுக் . . *
கலைநூறெரிந்தவெங்கோன்ரகுநாதன்கரந்தைவெற்பிற் . *
றொலையாதிருந்தெம்மனத்தூடுதோன்றுந்துயர்தொலைக்கக் . *
கொலைவேலிருந்தகையாற்குறிப்பீர்மணிக்கொம்பினையே. (ருஉ)

தேசிகப்போதணிசண்பகக்காடுதிருந்திழையார் . . . *
நாசியொப்பாமலர்வினாயர்கோன்ரகுநாதன்வரைப் . . *
பாசிழைப்பூவைமுகைக்கோங்கில்வேடன்கைப்பாணமுற்றாற் *
காசினிப்பாலனைப்பாலையென்பார்கலைகற்றவரே. . . (ருங)

முகைகாட்டியமுன்றின்முல்லைநல்லார்தம்முகமதிவெண் . *
ணகைகாட்டியபுகலூர்த்தளவாய்ரகுநாதன்வரைத் . . *
தகைகாட்டியசெவ்விளநீரிலம்புயஞ்சாரிலகிற் . . . . *
புகைகாட்டியகுழனான்போகிநீயும்புனலுலகே. . . (ருச)

ஆடியதோகையன்னார்முகம்போன்மதியம்பொன்னெயில்
சூடியகானைப்பதிரகுநாதன்சுரும்பில்வள
நீடியபெண்ணைக்குரும்பைகண்டேன்மலர்நெய்தல்கண்டால்
வாடியசிற்றிடையீருமைப்போலுமனைவுலகே. (௧௫)

கொத்தார்குழலியர்கண்டமொப்பாவெழில்கொண்டமுத்தி
னத்தார்கரந்தைரகுநாயகன்செம்பிநாட்டுவரை
முத்தார்மருப்பிற்கருவிளங்காணின்முளரிமல
மொத்தார்மதிமுகத்தீருமைக்கார்வெற்புலகென்பரோ. (௧௬)

தொடைகாட்டும்பூங்குழலா[illegible]போவிளந்தாவியன்ன
நடைகாட்டும்வைகையம்பூந்துறையா[illegible]ரகுநாதன்வெற்பி
விடைகாட்டுநூல்வெற்பிளமுலைகாட்டுமிளங்கொடியீர்
படைகாட்டுமைவிழிகண்டுணாப்பேனிப்படியென்னவே. (௧௭)

பூவளர்வாவிக்கமலமும்விதியும்பொன்மனையு
மாவளர்தேவைப்பதிரகுநாதன்மணிவரைமேற்
கோவளர்தானத்தினங்கனுசேர்கைகுறித்தமைத்தீர்
காவளர்பூவைக்கரசமைப்போலெவர்காசினிக்கே. (௧௮)

அறங்காவல்கொண்டமனுமுறையாலணிநாவசைந்து
கறங்காமணிமுன்றிலான்ரகுநாதன்கரந்தையன்னீ
ருறங்காதவெங்கண்மதகரிபாயநெஞ்சூடுருவிப்
புறங்காணிலார்பொறுப்பார்பிணைபாயப்பொறுக்கினுமே. (௧௯)

தங்காமதேனுவெனவந்தகார்செம்பிநாடனுயர்
செங்காவியங்குடையான்ரகுநாதன்சிலம்பின்மிக்க
வெங்காமவெய்யவிடாய்க்கிளநீர்தந்துவெவ்விடத்தை
யங்காமவல்லிநல்லீர்மறைத்தீர்நன்றறிவுமக்கே. (௨௰)

நிலையேந்துமாளிகைமாளிகைமாதர்சணெஞ்சமதிக்
கலையேந்துந்தேவைரகுநாதன்வெற்பில்வெங்கள்ளைவரிச்
சிலையேந்தும்வாணுதலீரங்கையேந்துஞ்செயலிதென்னோ
விலையேந்துமாணிக்கவள்ளமிங்கேவைத்துமெய்ம்மறந்தே. (௨௧)

பொற்பணைவேழம்புரவிவெள்ளோதிமம்பூவையர்தோ
ணற்பணைமேவுங்கரந்தையர்கோன்ரகுநாதன்மணி
வெற்பணைவாழ்வெமதென்றேமறைத்துமைவேலவளர்
கற்பணைதோகைமயிலேவரைவளங்காட்டியதே. (௩௨)

வீரைக்குள்வந்தசிந்தாமணிநீதிவிளங்கவெழு
பாரைப்புரந்தரகுநாதன்வெற்பிற்பகலில்விண்சேர்
தாரைக்குலம்புவிகாணவொண்ணாதெனுந்தன்மைகொண்டோ
வாரைச்சுமந்ததனத்தாய்நின்செங்கைபுறைக்கின்றதே. (௩௩)

வழியும்பிரசமலர்முல்லையான்[illegible]மெழும்பொய்யும்
பழியுந்தவிர்த்தரகுநாத[illegible]துபதிவரையிர்
மொழியுங்குவலயம்பாணியினாவின்றுமூடவந்து
சுழியுந்திரையுங்குமிழியுந்தோன்றித்துயர்செய்யுமே. (௩௪)

சந்தந்தெளிக்குங்கலைவாணர்சங்கத்தமிழ்க்குருகிச்
சித்தங்களிக்கும்ரகுநாதன்றேவைச்சிலம்பின்மணி
முத்தம்பதிக்கும்பவளச்செவ்வாயிளமூரன்மின்னே
யத்தந்தனக்குக்கடல்பொருந்தாதெலபராய்ந்தவரோ. (௩௫)

முந்நீர்சொரிமுத்தமாணிக்கராசிமுகந்தருவி
நன்னீர்சொரிகந்தமாதனத்தான்ரகுநாதன்வரைப்
பொன்னீர்பவளத்தமுதெமக்கீயும்பொழுதினஞ்சு
தன்னீர்தருமெனவோமறைத்தீர்செழுந்தாமரைக்கே. (௩௬)

மானார்விழியெனமைந்நீலம்பூத்தவயற்புகலூர்
ஞானாகரனிசைசேர்தளவாய்ரகுநாதன்வரைக்
கானார்கருங்குழலீர்சுறவார்கடல்கைப்படுத்தீ
ரானல்விடுத்ததென்னீர்வரையீழத்தகலிடமே. (௩௭)

நல்லார்நகைக்குமனைவளர்தாளிநனைமலரு
மல்லார்கரந்தைரகுநாதன்றேவைவரையின்மணிக்
கல்லார்கனங்குழையீர்மருண்டீரின்றுகண்டசர
மெல்லார்வரிவளைக்கைபுனைந்தீர்குருகெய்தவுமே. (௩௮)

ஆரியர்போற்றுமிராமேசர்தாளிணைக்கன்புவைத்த *
சூரியன்விஜயர்கோன்ரகுநாதன்சுரும்பிலின்று *
கூரியவாளிரண்டங்கையிலேந்தியகொங்கையிளங் *
காரிகையீருடைமாதங்கியாரென்பர்கண்டவரே. (௬௯)

வாளும்பரசும்வயிரமுமேகொண்டுமாற்றலரை *
யாளுந்தனியடிவேல்ரகுநாதனணிவரையீர் *
தோளுங்கரும்புமெனதாருயிர்வந்துகுறைகொள்ள *
நீளுங்கணைகொண்டுநின்றாலெவ்வாறுயிர்நிற்கின்றதே. (௭௰)

இலையேதழைத்துக்கொழுங்[illegible]திக்கல்காய்த்துவெய்ய *
கொலையேபழுத்தசெவ்வேல்ரகுநாதனைக்கூடலர்போன் *
மலையேயெனக்களித்தீர்கடலேறுகைவாய்த்துநின்றீர் *
சிலையேபடைத்தநுதலீர்திகைத்ததென்சிந்தனையே. (௭௧)

நெய்வாய்த்திகன்மன்னர்சோரியின்மூழ்கிநிணமருந்து *
மைவாய்த்தவேற்படையான்ரகுநாதன்மணவையன்னீர் *
மெய்வாய்த்தகோலவனமுலையார்தம்மைவிட்டுவளைக் *
கைவாய்த்தமைவிழியாருடன்சேர்தல்கடனல்லவே. (௭௨)

செம்பேந்தியமதில்விஜயர்கோன்முச்செகமனைத்து *
நம்பேந்திவாழமனுமுறையான்ரகுநாதன்வெற்பி *
லம்பேந்திநிற்பதுங்கண்டேனினியுன்றனங்கையினாற் *
கொம்பேந்திநின்றென்னிடையூறுதீரக்குறிக்கொள்ளுமே. (௭௩)

யாவுக்கிசையும்பெயரோபுனைந்துமெய்ப்பாவலர்தந் *
நாவுக்கிசையும்பெரும்புகழான்ரகுநாதன்வரைக் *
கோவுக்கிறையின்றளித்தீரெமக்குக்கொடுத்தவிரு *
மாவுக்கிறையிலிசெய்தீர்புகழும்வகையறிந்தே. (௭௪)

தாருஞ்சிலையுங்கலவையும்பூணுந்தருந்தருவுங் *
காரும்பொருவுகையான்ரகுநாதன்கரந்தையன்னீர் *
வாருந்துவண்டமருங்குலுநாணும்வருந்தலைநீர் *
பாருங்கொடிதுகொடிதுகண்டீரிப்பணைமுலையே (௭௫)

கார்த்தலத்தோயுங் கொடிமதில்சூழுங்கரந்தையர்கோன் . . *
பார்த்தலம்போற்றும்ரகுநாதன்வெற்பிற்பசுங்கதிர்ப்பூண் . *
சேர்த்தலங்காரித்தமின்னேயினிமைச்செந்தேனிங்ஙனே . *
கூர்த்தலங்கைதத்தலமேவியவாறுகொடுமையின்றே. . . . (எசு)

மடற்கேதகைகற்றுந்தேவையர்கோன்வயமன்னர்க்கெல்லா . *
மடற்கேசரிதளவாய்ரகுநாதனணிவரையீர் . . . . . . *
விடற்கேதுணிவுற்றிருநாகமும்வெளிவிட்டுவெங்கட் . . *
கடற்கேதிருநெடும்பூட்கைதந்தீமொன்னசாரணமே. . . . (எஎ)

மேவியதூதின்மெலிவுரைத்திட[illegible]வுமெய்த்தரும . . . *
னேவியமேகம்ரகுநாதன்[illegible]றவைபிலெண்டிசையுந் . . . *
தாவியசெங்கண்மடப்பிணைக்கேயிறைதாவவுயி . . . *
ரோவியநீகொடுத்தாலென்செய்யாதிவ்வுலகினையே. . . . (எஅ)

சொற்பேறுபெற்றதளவாயெனுந்துரைராயனரு . . . *
ணற்பேறுதேவரகுநாயகன்செம்பிநாட்டிலுயர் . . . *
வெற்பேறவிட்டுத்துணையார்கண்ணேணிவினைந்தொளித்தா . *
லற்பேறுநெஞ்சமினியென்படாதுபெண்ணாரமுதே. . (எகூ)

கோங்கார்முகிழ்முலைக்கொம்பரன்னீரண்டகோளமெல்லா . *
நீங்காதமெய்ப்புகழான்ரகுநாதனெடுங்கரந்தைப் . . . *
பாங்கார்கொடிக்கயலுங்காநின்றீர்தண்பயோதரத்தே . . *
தீங்காநதலையிடிலாங்காண்மதிகுலத்தென்னவரோ. . . (அ௦)

தூதேநடந்தகவிகுலமாமணிதோன்றுகொடி . . . . *
மீதேயுயர்த்தரகுநாயகன்றமிழ்வரையிலிப் . . . . *
போதேவனத்திலிறைகங்கைமேவப்புரிந்ததனுன் . . . *
மாதேயுனையுஞ்சொலலாம்ரவிகுலமன்னனென்றே. . (அக)

செய்க்கஞ்சனந்தம்பயில்செம்பிநாடன்சினவடிவேற் . . *
பொய்க்கஞ்சனந்தப்பொருரகுநாதன்பொலங்கிரிமேன் . *
மெய்க்கஞ்சனந்தருமின்னேயதிசயமெல்லியநின் . . *
கைக்கஞ்சனந்தங்கவிங்கெனக்கேதனங்கண்ணுற்றதே. . (அஉ)

கண்டேயெனுஞ்செங்கனிமொழியீர்சிலைக்கார்விசயன் . . *
றிண்டேர்கடவும்ரகுநாதன்வெற்பிற்செந்தாமரைமேற் . *
கொண்டேகுவளையிருத்தல்கண்டேனக்குவளையின்மேல் . *
வண்டேய்கமலமுங்கண்டேனிதுவென்னமாயங்களே. . (௮௩)

சீதநந்தாததளவாய்க்குமாரனெடுங்கருட . . . . *
கேதனங்கொண்டரகுநாதன்றேவைக்கிளர்ந்தகந்த . . . *
மாதனங்கண்டுவந்தென்றனுக்கோடிவளைகடலெப் . . . *
போதனம்போனடையீர்கண்டுநானுடல்பூரிப்பதே. . (௮௪)

ஊனிடமானமுனைவேற்பகைத்திசைத்தோடிநெடுங் . . *
கானிடமாகவென்றோன்ரகுநாயகன்கந்தகிரித் . . . *
தேனிடமாமொழியீர்கணப்போதிற்செறிவிலங்கை . . . *
மானிடமாக்கிவிட்டீருமைப்போலெவர்வல்லவரோ. . (௮௫)

கானேர்பொருப்புமருவியும்போற்கமழ்முல்லையந்தார் . *
தானைவிளங்கும்புயரகுநாதன்றமிழ்க்கரந்தைத் . . . *
தேனேவளவனிலைமைவிட்டேசென்றுதென்பொதிய . . *
மானேரடைதனன்றேபுண்டரீகமணிக்கொடியே. . (௮௬)

சீலத்துமிக்கதளவாயளித்தருள்செல்வனொரு . . . . *
காலத்தும்பொய்யுரையான்ரகுநாதன்கரந்தைநகர் . . . *
போலத்துலங்கும்பொலங்குழையீர்சென்றுபூம்புனறே . *
யாலத்துமாந்தளிர்கண்டோமிதுவென்னவற்புதமே. . (௮௭)

நடுப்பதுமாலயமாதனையாய்நடைகற்றவன்றே . . . . *
கொடுப்பதுங்கற்றரகுநாதன்றேவைக்குவட்டின்மத . . *
னெடுப்பதுமெய்வதும்பாராய்வளைதருமிக்கையினி . . *
லடுப்பதுங்கஞ்சத்தரும்பாகும்வேலுக்கழகல்லவே. . (௮௮)

மெய்ம்மலராசனமின்னுன்மிதிலையில்வில்வளைத்த . . . *
கைம்மலர்மேகந்துணைரகுநாதன்கரந்தைவெற்பிற் . : *
செம்மலர்மேவுந்தேனுளதேயன்றித்தேனிடத்தி . . . *
லம்மலர்தோற்றுங்கொல்லோசொல்லுவாய்முல்லையாரணங்கே. ௮௯.

வணங்காததெவ்வைப்பொருமால்சொரிமுத்துவன்னியன்பொன்
னணங்காருமார்பன்ரகுநாதன்றேவையணிவரைமேற் . . *
குணங்காதலிக்குநெடுமீனந்தன்னுடன்கூடியத்த . . . *
மிணங்காதிணங்குமழியாதகன்னியிளம்பிடியே. . . (௯௰)

முறையுந்தருமமுநீங்காதமான்மும்முரசுமன்னோர் . . . *
திறையுந்தருமுன்றிலான்ரகுநாயகன்றேவைவெற்பி . . . *
னிறையுங்கமலத்திருப்பதல்லாவிந்திரநீலத்தின்மே . . . *
விறையுங்குடிபுக்கிருப்பதுண்டோடவியெழினுமே. : (௯௧)

கலைக்கேநெடுங்கடலன்னனடைக்கலங்காத்தவன்செஞ் . . *
சிலைக்கேவிசயன்ரகுநாயகன்றமிழ்த்தேவையிலா . . . *
விலைக்கேகருங்கொழுந்தேந்துமின்னேகுன்றியற்கையன்றோ *
வலைக்கேவளர்வதென்றோசங்கபாணியமர்கின்றதே. : (௯௨)

பணையேதடங்கண்டுயிலாதவளைப்பதியுரக . . . . . *
வணையேதுயிலும்ரகுநாதன்வெற்பிலென்னாருயிர்க்குத் . . *
துணையேயுனைவந்திரந்தேற்குவெந்துயர்தோன்றவடிக் . *
கணையேபிடித்துச்சிலைவிடுத்தாய்கற்றகல்விநன்றே. . (௯௩)

நெய்க்கின்றகூந்தற்கொடியிடையீர்மனுநீதியினான் : . *
மெய்க்கின்றவாய்மைரகுநாயகன்கந்தவெற்பிலிப்போ : . *
துய்க்கின்றமான்மறியும்புண்டரீகமுமோரிடைநீர் . . . *
வைக்கின்றநீதியினாலிணையோவஞ்சிமன்னனுமே. . . (௯௪)

பிறியாததெவ்வர்க்கும்பின்னிட்டபேர்க்கும்பிறங்கிலைவே : *
வெறியாதவன்ரகுநாயகன்றேவையிலென்றுங்கண்டே . . *
யறியாதசிற்றிடையீர்பொருந்தாரையடக்கியநீர் . . [றே. ௯௫)
பொறியாதுவிட்டதென்னேபொறிசூழ்ந்தபொற்கோட்டையின்

காரணவுங்கொடைவிளையர்கோனன்றுகஞ்சன்விட்ட . . *
வாரணம்வென்றரகுநாதன்வெற்பின்மணக்குறிபோற் . . *
றோரணமுத்தத்தொடுமாவிளந்தளிர்தோன்றவெதிர் . . *
பூரணகும்பம்வைத்தாய்மலர்விட்டிற்பொலங்கொடியே. (௯௬)

அலம்பணிவிளைபுடைசூழும்விளைக்கதியனெழு . . . *
தலம்பணிதேவையர்கோன்ரகுநாதன்றமிழ்க்கரந்தைப் . . *
புலம்பணிமேகலைப் பொன்னேமறந்துங்கைப்போதின்மின்னார்
சிலம்பணியாவொன்பதோவரிபாய்வண்டுசேர்க்கின்றதே. . (௯௭)

நிதிகொண்டவண்மைத்தளவாய்குமாரனிலந்தழைக்குந் . *
துதிகொண்டதேவைரகுநாதன்மால்வரைத்தோகையன்னீர் . *
கதிகொண்டுதாமரைதாங்கிநின்நீர்செங்கலசவிம்ப . . . *
மதிகொண்டுதாங்குமில்மலாமெனக்கலர்மாதென்னவே. (௯௮)

மழையணிவார்குழன்மின்னிடைமாதேமருளவிசைக் . . *
கழையணிதேவைரகுநாதன்வெற்பிற்கதிரொளியோ . . *
டுழையணியாழின்விரலாலிசைத்துள்ளுருக்குதலாற் . . *
றழையணிகானத்தவனொனும்வாய்மைதருமுமக்கே. . (௯௯)

முத்திக்குவேலிதழைக்கின்றதேவைமுதல்வனருட் . . *
பத்திக்குவாய்த்தரகுநாதசேதுபதிவரைமே . . . *
லெத்திக்குங்கண்டறியோமணங்கேபச்செனுங்குழைசே . *
ரத்திக்குஞ்செம்மலர்காட்டிநின்றாயின்றதிசயமே. . . (௱)

மையாழிவையம்புகழ்செம்பிநாடன்மறந்தும்பொய்யா . *
மெய்யால்விளங்கும்ரகுநாதன்வெற்பில்வெங்கோவடையக் . *
கையாரவேநின்றிசைத்திடக்குன்றங்கவிகைசெய்தாற் . . *
பொய்யாதுனைச்சொல்லவாங்கண்ணனென்றுபூங்கொடியே. ௱௧

பலவுங்கமுகும்பசும்பனிக்கோடும்படைத்துநின்று . . *
நிலவுங்கரந்தைரகுநாதன்காக்குநெறியியல்பா . . . . *
மிலவுந்துகிரும்பொருமிதழாய்நின்னிருகையினுங் . . *
குலவும்படிசெங்கதிர்மாழையேந்திக்குலாவுவதே. . . (௱௨)

காக்குங்கருணையுங்கல்வியும்வாழ்வுங்கவிமதுர . . . *
வாக்குந்தழைத்தரகுநாதன்றேவைவருவிருந்தாத் . . . *
தேக்கும்படிகனிவாயமுதாரவந்தேற்றினிமை . . . *
நோக்கந்தனைமறைத்தாலியல்போவஞ்சிநுண்ணிடையே. (௱௩)

பன்னுந்தமிழ்ப்பயிர்வாடாதுமாரியிப்பாரின்முத்தும் . . *
பொன்னுஞ்சொரியும்ரகுநாதன்றேவைப்பொருப்பிலுயர் . *
மன்னும்பெரியவனைநீத்துறுகண்மருவுகையாற் . . . *
பின்னுங்குழலணங்கேயறிந்தேனுன்றன்பேதைமையே. (௱௪)

தெளியேகவொண்குடைதன்னாற்குளிர்செகமேழுமிசை . . *
யொளியேபரவும்ரகுநாதன்றேவையிலோங்குபசுங் . . *
கிளியேயெனுமொழியீரங்காதின்றுகேழ்கிளர்தண் . . *
ணளியேமறைத்ததனாற்கொடியாரொன்றறிந்தனமே. . (௱௫)

வேரிப்பசுந்துணர்வார்குழலீர்கலிவெப்பொழிக்கு . . . *
மாரிப்பருவம்ரகுநாதன்றேவையில்வண்குடத்தே . . . *
பூரிப்பநெஞ்சிற்கருதாமனஞ்சிற்புரிந்ததுகை . . . . *
நீரிப்படிக்கலந்தாற்பிறிதேதுநிகழ்த்துவதே. . . . (௱௬)

ஆர்க்குங்கலாபமயிலனையீர்பகிரண்டமெல்லாம். . . . *
போர்க்கும்புகழ்தளவாய்ரகுநாதன்பொருப்பிலணி . . *
சேர்க்குந்தனங்கண்மலைபோற்கண்மூடித்திறக்குமுன்னே . *
பார்க்கும்படியிப்படிக்கண்டிலேமொருபாரினுமே. . (௱௭)

திவளக்களிவண்டிசைபாடத்தானந்தினம்பொழியுங் . . *
கவளக்கடாசலத்தான்ரகுநாதன்கரந்தையன்னீர் . . . *
தவளக்குளிர்முத்தமல்லாமலத்தந்தனிற்சிறந்த . . . . *
பவளக்குலமும்படுவதுண்டோமலர்ப்பங்கயத்தே. . . . (௱௮)

ஒன்னாருயிர்விடச்செங்கையில்வேலையுறைவிடுங்கைப் . . *
பொன்னாடர்தாருரகுநாதன்றேவைப்பொலங்கிரிவேள் . . *
வின்னாண்மறைத்தகரும்பனையீரந்தவேள்வனச . . . *
வன்னாண்முகையென்கொலோவினையேனுயிர்வாட்டுவதே. (௱௯)

சினத்தாமரையொல்லார்தனையேதொழச்செங்கடுக்கை . . *
யினத்தாமரைத்தொழுமால்ரகுநாதனையெண்ணலர்போங் . *
கனத்தாமரையிருள்வார்குழலீர்கட்கருஞ்சுரும்பென் . . *
மனத்தாமரைபுகுமென்றேகையாரமறைக்கின்றதே. . (௱௰)

தரியார்வணங்குந்தளவாய்குமாரன்செந்தாமரையாள்
பிரியாததேவைரகுநாதன்வெற்பிலென்பேரறிவாம்
விரியாழிமாயக்கயல்குடியாதுவிலக்கியபின்
இரியாதுழக்குதனன்றோமழலைக்கிளிமொழியே. (௱௰௧)

தேக்கமலவயற்றேவைகாவலன்செந்தமிழுந்
தேக்கலையும்வல்லான்ரகுநாதன்கிரியினெடுங்
காதற்கடல்வெள்ளநீந்துதற்கேகுடங்காட்டியநீ
பேதக்கவலையொளித்ததென்னேபுகல்பெண்கொடியே. (௱௰௨)

மொய்தோய்பகைஞர்வரையுரம்பாய்ந்துமுழைப்படுத்துங்
கைதோய்கடாசலத்தான்ரகுநாதன்கரந்தைவெற்பின்
மெய்தோயநின்றவுயிர்வாடுமென்பதும்விட்டிங்ஙனே
மைதோய்மழைக்கண்மறைத்தனன்றோசிலைவாணுதலே. (௱௰௩)

வயத்துக்கிசைந்தபுகழ்த்தளவாய்தந்தைமைந்தன்மிக்க
செயத்துக்கொருதுங்கவேள்ரகுநாயகன்றேவையிலம்
புயத்துக்குவலயந்தார்புனைந்தீரிப்பொறையமைத்தா
னயத்துத்தருமனென்றேமடவீர்சொல்லுநானிலமே. (௱௰௪)

சேல்கொண்டநீலக்கடல்சிவப்பேறச்சிலைதிணித்துக்
கால்கொண்டதேவைரகுநாதன்வெற்பிற்கருவிளம்பூ
மேல்கொண்டகாந்தட்குலத்தோடுங்கூடவிளங்கிழையீர்
மால்கொண்டகாலத்துமென்னேமணக்கமலர்த்திலவே. (௱௰௫)

திரைவந்தமுத்தும்வரைவந்தபொன்னுந்தெவ்வேந்தர்தந்து
நிரைவந்துபோற்றும்ரகுநாதன்றேவையினேரிழையீ
ருரைவந்துதேற்றவுணர்த்தீரொன்னெஞ்சமுழலவைத்த
வரைவந்தலரியென்கண்ணனதென்னகண்மாயமிதே. (௱௰௬)

வெங்கயங்கேதம்பொருந்தாதருள்புகழ்வேந்துயர்த்த
செங்கையங்கேதனமால்ரகுநாயகன்றேவைவெற்பிற்
பங்கயங்கேகயம்போல்விரமுதம்பசுங்கணின்ற
கொங்கையிங்கேவிட்டிருந்ததென்னேதண்குவலயத்தே (௱௰௭)

சுளைப்பாரமுட்குடமூற்றுசெந்தேறல்சுனைப்பரந்து *
திளைப்பார்கரந்தைரகுநாயகன்றமிழ்த்தேவையன்னீர் *
முளைப்பாளையென்றும் புதைக்கப்படாதென்றுமுதுணர்ந்தோர்
விளைப்பாளையின்றுபுதைத்தேதனத்தைவிடுகின்றதே. (௱௰௮)

வங்கந்தழுவுங்கடல்சூழுந்தேவைக்குவாய்த்ததள *
சிங்கங்கருணைரகுநாதன்செம்பொற்சிலம்பின்மலர்க் *
கொங்கங்கமழுங்குழலீர்முகத்தைக்குபேரனெனச் *
சங்கம்பதுமமும்வேண்டுமென்றேகண்ணிற்சார்கின்றதே. ௱௰௯

கடந்தோய்மதகளிறன்னானந்தம்பரகண்டன்முத்து *
வடந்தோய்தனத்தியர்வேள்ரகுநாதன்வரையனையீர் *
தடந்தோயமுற்களமையாதென்றேநிறந்தாமுமல *
ரிடந்தோயவின்றுமதுகரங்கூடியிருக்கின்றதே. (௱௨௰)

சீதகங்காதரற்கன்பாம்ரவிகுலசேகரன்பூ *
மாதகஞ்சேர்புயத்தான்ரகுநாதன்மணிவரைக்கோ *
மேதகஞ்சேர்குழையீரரிமாவொடுமெல்லியகைப் *
போதகஞ்சேர்ந்தபகையில்லையோவுங்கள்பூம்புனத்தே. (௱௨௧)

தருபாற்புதுமுத்துந்தொன்னாள்வயிரமுந்தந்துதெவ்வ *
ரிருபாற்பரவும்ரகுநாதன்றேவையிலேமவெற்பில் *
வருபாற்குறுந்தொடியீருலவாவிந்துமண்டலத்தே *
யொருபாற்கரனண்ணினாலென்படாதிவ்வுலகெங்குமே. (௱௨௨)

நேர்கின்றசிற்றிடையீர்முகினீருண்ணநீட்டுகைம்மா *
ஊர்கின்றதேவைரகுநாதன்வெற்பிலென்னுள்ளிரங்க *
வார்கின்றவஞ்சனக்கண்மறைத்தீரிந்தமாமறைத்தாற் *
சார்கின்றபுண்டரிகத்தாலுமக்கென்னதாழ்வுமக்கே. (௱௨௩).

தோடார்பசுங்குழையீர்துரைராயன்சுரந்துநறை *
யேடாருந்தாமன்ரகுநாதன்வெற்பிலிரவலர்க்கே *
வீடாதுகுன்றத்திசையொளிதோன்றவிரும்பியத்தம் *
வாடாதளித்ததனாற்சொலலாமுமைவள்ளலென்றே. (௱௨௪)

அதிராவிருந்தவிருட்குநல்லார்கவியாம்பனிக்குங் *
கதிராயுதித்தரகுநாதன்றேவைபிற்கைம்மலர்க *
ளெதிராயதானுவிற்கேற்றாலவஞ்சமிமையவர்க்கு *
முதிராததீஞ்சொற்கிளியேபுனைதன்முறையல்லவே. (௱௨௫)

வஞ்சத்திசைமன்னரோடிடவாணர்வறுங்கலியு *
மஞ்சக்கனகந்தரும்ரகுநாதனருட்கரந்தை *
நெஞ்சத்தின்மாலென்றுணர்ந்திக்குடந்தந்துநீர்மலர்ப்பூங் *
கஞ்சத்திளந்திருவென்றேநற்பாவையைக்கைக்கொண்டதே. (௱௨௬)

வெல்லும்பதாகைத்தளவாய்குமாரன்கைவேழமும்போர் *
மல்லுங்கடந்தரகுநாதன்றேவையில்வல்லவர்க்குப் *
புல்லும்படையென்பதோகொலைநாட்டம்புகைமறைத்துச் *
சொல்லும்பொழுதணங்கேகுயத்தானுந்துயர்செய்வதே. (௱௨௭)

செங்கைத்தருவினிசைவல்லிசேர்தளசிங்கமலர் *
மங்கைக்கினியரகுநாதன்றேவையில்வார்க்கடங்காக் *
கொங்கைக்குநேரில்லையென்றேவிடுத்துவெங்கூர்விழிக்கு *
மங்கைத்தலமின்றுநேமொன்றுகாட்டியதாரணங்கே. (௱௨௮)

களிக்குங்கயல்வெடிபோயுயர்வானவெண்கங்கைத்தெண்ணீர் *
குளிக்குங்கரந்தைரகுநாதன்வெற்பிற்குவலயங்காத் *
தளிக்கும்படிப்பெண்ணரசேதுணிவுற்றவ்வாழியுயி *
ரொளிக்கும்படிவிடலாமோநெறியன்றுனக்கிதுவே. (௱௨௯)

தடமேவுதேவைப்பதிபுரப்போன்றளவாய்மகிழத் *
திடமேவுவெற்றிரகுநாதன்வெற்பிற்சிறியவனு *
வடமேருவெற்புக்கெதிர்நிற்குமோவரிவாளரவப் *
படமேவுமல்குன்மின்னேயுய்யுமாறின்றுபார்த்தருளே. (௱௩௰)

வரமேந்துவெற்றியரக்கர்பிரானுயிர்வாட்டவொற்றைச் *
சரமேந்துதேவைரகுநாயகன்றமிழ்வீணாவெற்பி *
லரமேந்துநுங்கள்குலத்தியல்போவனத்தாடுவரக் *
கரமேந்திநின்றமடவீர்கலைகாவாகின்றதே. (௱௩௧)

வரிவளை நாளுமறுகூடுலாவிவயங்குமுத்தஞ்
சொரிதருதேவைரகுநாதன்வெற்பிற்சுருதிபயின்
றரிவளர்பூங்குழலாய்தமியேனையிங்காள்வதற்குக் [௱௯௨
கரிவெளிதோன்றப்பிணையேன்றொடர்ந்தின்றுகைக்கொள்வதே.

சொற்பாவலர்தங்கிளைவாழச்செம்பொன்சொரியும்வண்மை
நற்பேறுதேவைரகுநாதன்வெற்பினலந்தருமிப்
பொற்பாருநங்கையைச்சேர்ந்தாலுயிரைப்புரப்பதல்லால்
விற்பாவியமணிவெங்கரத்தூடென்சொல்வீழ்விப்பதே. (௱௯௩)

கார்த்தாமவார்குழலீர்பசுந்தேனுமிழ்கானறுந்தார்
வேர்த்தாமமுல்லைரகுநாயகன்றமிழ்வீரையன்னீர்
பார்த்தாதரமொடுபார்ப்பார்மறையிற்பரிந்தகத்தே
சேர்த்தானொன்றேதனத்தாரிவவேதஞ்செயுந்துணிவே. (௱௯௪)

சிந்தாடவந்தவர்தம்மோடெழிலைத்தெரிந்துகொள்ள
வந்தாடவர்பணிமால்ரகுநாதன்வரையணங்கே
பந்தாடல்கண்டனமம்மானையாடலும்பார்க்கவரந்
தந்தாடல்செய்யினுனக்கெய்துங்காண்வெகுதன்மங்களே. (௱௯௫)

இல்லாரைக்கற்பகமாக்கியுடையனொனினுமிகப்
பொல்லாரைக்கொல்லுஞ்செயரகுநாதன்பொருப்பணையீர்
வல்லாரைக்கற்பவகையறிந்தேமுன்னுவாகடமா
நல்லாரைக்கோரியகையாந்தகரையுநாடுவமே. (௱௯௬)

விலைப்பாரரசரறியக்குனித்திகல்வென்றுவந்த
சொலைப்பாவலர்புகழ்மால்ரகுநாதன்சொனவரைக்குத்
தலைப்பாகைதுண்டமென்சோமன்முன்வத்திரந் தனிற்கலந்தான்
மலைப்பாரமாவணச்சேலையிலாதமணமெனவே. (௱௯௭)

கண்டரிகம்பவ்வாவைத்தெறலிற்கருதலர்வாள்
கொண்டரிகம்பமிலாரகுநாதகுபேரன்வரைப்
பண்டரிகம்புளமின்னேபொரவத்தம்பார்த்திருந்த
புண்டரிகம்பிணைமேற்பாயத்தந்திபுறப்பட்டதே. (௱௯௮)

தீனத்தைவென்றகொடைப்புகழ்கேட்குஞ்செவிக்கமுத . *
பானத்தையொத்தரகுநாதசேதுபதிவரைவாய்க் . . . *
கானத்தைவானத்தைநேர்சொலிடையொருகன்னியத்த . *
மீனத்தைநாடிச்செலக்கும்பராசிவெளிப்பட்டதே. . (௱௩௯)

மஞ்சாங்கருதலர்போர்ப்படைமேற்சண்டமாருதம்போல் . *
விஞ்சாங்கமூலபலரகுநாதன்வியன்சிலம்பிற் . . *
பஞ்சாங்கமமாதிமறைகாட்டிச்சொர்க்கமிப்பாற்படுத்தி . *
யஞ்சாங்குலத்தவர்பார்ப்பாரைச்சேர்ந்தததிசயமே. . (௱௪௰)

பொருப்பதெதிர்வரல்போற்சஞ்சனல்வந்தபோதகத்தின் . *
மருப்பதொசித்தசயரகுநாதன்மணியருவி . . . . *
பருப்பதமீதுமலருஞ்செங்காந்தள்பரவையிற்பூத் . . . *
திருப்பதிசயங்காண்குன்றவாணரிளங்கொடியே. . (௱௪௧)

நாலாயுதத்தையிகன்மேற்றயித்தியர்ஞாட்பிலெதிர் . . . *
மாலாயுதத்தைப்புரிரகுநாதன்வரையணங்கே . . . *
வேலாயுதத்தைக்கைக்கொண்டுநின்றாயெதிர்வெற்புமெய்தாற் *
காலாயுதத்தையனென்றெனையேதொழுங்காசினியே. (௱௪௨)

தொகுந்தளவாய்மகிழ்தெய்வீகத்தேவைத்துறைக்கரசச் . *
சகுந்தவிலோசனத்தான்ரகுநாதன்சயிலமின்னே . . *
புகுந்திறையைவர்தெரியாமன்மச்சபுரத்திருக்க . . . *
மிகுந்துரியோதனபாரவணிகள்வெளிப்பட்டவே. . (௱௪௩)

அங்ககலிங்கமலையாளமீழமனைத்தும்வென்ற . . . *
சிங்கவிசயசயரகுநாதன்சிலம்பிற்பொன்னே . *
சங்கிலியாரையுங்கண்டேன்பரவைதனையுங்கண்டான் . . *
மங்களசுந்தரனென்றெனையேதொழுமண்டலமே. . (௱௪௪)

ஆலங்கையாதவமுதின்முன்னுளுண்டலகையைக்கொ . *
லேலங்கையாதருண்மால்ரகுநாதன்வெற்பேந்திழையீர் . . *
சேலங்கைக்கொண்டபின்னேமலையாளமுந்திண்டிக்கல்லைப் *
போலங்கையாமஃதில்லாதபோதுபுலப்படுமே. . . (௱௪௫)

யாலூர்சங்கிராமவிசைகூதர்பாடப்பவனிவரு *
மாலூர்நகுலனெனும்ரகுநாதன்வரையணையீர் *
கோலூர்முன்காட்டியபின்குன்றத்தார்வழிகூட்டியப்பா *
ஒலூர்நுங்காஞ்சிபுரங்காட்டுதமெருண்டைநாட்டியல்பே. (௱௪௬)

எண்கட்டுமானபுற்றேன்றுடலர்படையெங்கவடுந் *
திண்கட்டுவாங்கத்துரைரகுநாதவசீரன்வரைப் *
பண்கட்டுமென்மொழியீர்நீர்மிகவும்பலரறியக் *
கண்கட்டுவித்தையுஞ்செப்பிடுவித்தையுங்கற்றவரோ. (௱௪௭)

தாவியங்கற்றமிலாமற்பொருதச்சமரிலறை *
கூவியங்கத்திகல்வெல்ரகுநாதகுமுணன்வெற்பி *
லோவியங்கற்பகவல்லியன்னீரிவ்வுலகியற்கை *
காவியங்கற்றவர்க்கேயத்தமாகுங்கடபடமே. (௱௪௮)

கண்டரிதங்கையுரத்தையுமூக்கையுங்காதையும்வாட் *
கொண்டரிகொண்டல்ரகுநாதன்றேவைக்குலவரைப்பூ *
வண்டரிகங்குற்குழலீர்நும்முந்திமடியலையாற் *
புண்டரிகங்கண்முழுகத்தெரியும்புளினங்களே. (௱௪௯)

நாளத்தையம்புயவன்னப்பணைச்செம்பிநாடன்சக்கிர *
வாளத்தைவென்றபுயரகுநாதன்மணிவரைவேள் *
காளத்தைவெல்லுனைநாடகப்பாவையைக்காட்டுஞ்சும்மா *
தாளத்தையேந்திநின்றீர்மத்தளமுந்தருகுவனே. (௱௫௰)

இடனாகடற்றைவலனாகச்சாரியியற்றிடுவாட் *
டிடனாகவமெச்சியல்ரகுநாதன்சிலம்பிற்பெண்ணே *
கடனாகத்தந்தவரையெதிரோவரக்கண்டுமுறி *
யுடனேகொடுக்கவுடையார்பிணையையொளிப்பதென்னே (௱௫௧)

படியுமமரருலகமுமாசையும்பாதலமுங் *
கெடிகொளிசைரகுநாதவசீரன்கிரியணங்கே *
கொடியுமுரசுங்கணையுஞ்சிலையுங்கொடாமலணி *
முடிமாத்திரமதவேளுக்களித்தன்முறையல்லவே. (௱௫௨)

கேட்டத்த துவருமுட்குமதுகைக்கிளர்புலவர்
பாட்டத்தகுதிரகுநாதசேதுபதிவனைவாய்
நாட்டத்தகுவளைவேழங்குவளை நளினமல்லி
காட்டத்தகுமிளநீரொன்றுகாட்டல்கணக்கல்லவே. (௱௫௩)

ஆரங்கராசலமாநிதிவீரர்க்களித்திகன்மேற்
போரங்கமாகவருரகுநாதன்பொருப்பனையீர்
பேரங்கமாகும்பகோணத்திற்பாதியைப்பின்மறைத்தீர்
சாரங்கபாணியெனும்பேரொவ்வாறுதகுமுமக்கே. (௱௫௪)

சேண்டவர்வாழ்திருத்தேவையையாளுந்திருமணிமார்
பாண்டவர்தூதன்ரகுநாதசேதுபதிவனைவாய்
நாண்டவர்முன்னிட்டதிலேயொளித்துத்தன்னற்பெயரைப்
பூண்டவர்தானத்தைத்தான்வாங்கிக்கொள்ளப்புறப்பட்டதே. (௱௫௫)

விலையைமனறக்குங்கனகிரீடிவிவேகத்தெண்ணெண்
கலையைமறைக்குமனுரகுநாதன்கவின்வனைவாய்ச்
சிலையைமறைக்குநுதலீர்முன்னாகத்தெரிதலின்றி
வலையைமறைத்துவைத்தீர்பற்றவோசக்கிரவாகத்தையே. (௱௫௬)

படமினியார்வனைந்தெண்டிக்குங்காட்டெழிற்பார்த்திபன்கைத்
திடமினினீண்மந்திரவாள்ரகுநாதனற்றேவைவெற்பிற்
றொட்டமினியோங்குமணியீர்மைவாரியைத்தூர்த்தபின்பு
குடமினியேதுக்குநீரோவலியக்கொடுக்கினுமே. (௱௫௭)

வெம்பிற்கரளமெனக்காய்ந்திகலைவிடுத்துத்தன்னை
நம்பிற்கருணைபுரிரகுநாதநரேந்திரன்வெற்பிற்
செம்பிற்கனகமணியணியீர்முனங்கேசவன்கை
யம்பிற்கரன்படவெற்பரணங்களகப்பட்டவே. (௱௫௮)

வல்லாரங்காட்டியபம்பரத்திற்சுழல்வாம்பரிமேற்
செல்லாரங்காட்டுமுராரகுநாதன்றன்றேவைவெற்பில்
வில்லாரங்காட்டுமணியீர்மதிப்புமிகுந்ததனக்
கல்லாரங்காட்டியநீரோகல்லாரமுங்காட்டினன்றே. (௱௫௯)

அலசத்தைவாளியெனநேர்நவையையகற்றியறி *
நலசத்தையேகொண்டிழுகியாம்ரகுநாதன்வெற்பிற் *
பலசத்தைநீடுமுவரிமதித்தும்பருக்குவைத்த *
கலசத்தைக்காட்டியமுதத்தையேதுக்கரந்ததுவே. (௱௬௰)

தவளையிற்செல்வளர்காவினிற்றுவத்தாளமுதிக் *
கவளையிற்செல்செம்பியாள்ரகுநாதன்கனகவரைத் *
துவளையிற்செல்பவராமரையீர்மலர்த்தோழுந்திரி *
குவளையிற்செல்வண்டுகோங்கிற்செல்லூதமதென்கூறுகவே. (௱௬௧)

வண்டிறகாலவவர்முல்லையான்கவிவாணர்செய்யுட் *
கொண்டிறவீகைதருரகுநாதகுபேரன்வெற்பிற் *
பண்டிறவாமருந்தன்னீர்வெந்தாகப்பசிதணிக்சக் *
கண்டிறவாமலிள்நீர்கொடுத்தென்சுவையில்லையே. (௱௬௨)

மித்திரமன்னர்மகிழப்பகைஞர்முன்வீழ்ந்துதொழச் *
சத்திரமன்னவருரகுநாதன்சயிலவெற்பிற் *
சித்திரமன்னகுடிலேதனத்தைத்தெரியவைத்துப் *
பத்திரமன்னலறிவுறிற்சேதம்படைத்தவர்க்கே. (௱௬௩)

தளையாடுகாலொடொன்னார்திறைகட்டுஞ்சமுகத்திற்பொற் *
கிளையாடுதேவைத்துரைரகுநாதகிரீடிவெற்பில் *
வளையாடுகைத்தலத்தீர்பாச்சிகைக்குண்மறைத்துமனம் *
விளையாடச்சூதின்கனகவடங்கள்வெளிப்பட்டவே. (௱௬௪)

அனமிகத்தோன்றுவயற்செம்பிநாடனயன்றந்தைவா *
கனமிகத்தோன்றுதுசரகுநாதன்கனகவெற்பின் *
